தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

புதன்கிழமை, 1974 சனவரி 23.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Institute of Management.

* 30 *Q*.—Thiru K. ARIVAZHAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether there are **proposals** under the consideration of the Government to start a **full-fledged** Institute of Management?

நிர்வாகப் பயிற்சி நிறுவனம்

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

முழுமையான வசதிகளைக் கொண்ட நிர்வாகப் பயிற்சி நிறுவனத்தைத் தொடங்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசிலனையில் உள்ளனவா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம்.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, இதுபோன்ற நிர்வாகப் பயிற்சி நிறுவனம் ஐதராபாத்திலும், கல்கத்தாவிலும் முழுத் தகுதி படைத்ததாக உருவாகியிருக்கிறது. அதைச் சமீபத்தில் மத்திய அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறது. இங்கே உருவாக்கப்படுகின்ற நிறுவனத்தை நம்முடைய பல்கலைக் கழகம் எடுத்து நடத்துகின்ற முறையிலே டாக்டரேட் டிகிரி வாங்குகிற முறையிலே நிறுவுகின்ற திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஐதராபாத்தில் இல்லை. ஆமதாபாத்தில் என்று திருத்திக்கொள்ளவேண்டும். ஆமதாபாத்திலும், கல்கத்தாவிலும் இருக்கிறது. அண்மையிலே பங்களூரிலும் இந்த நிறு

வனம் அமைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு தென்னாட்டில் ஒரே ஒரு இடத்தில்தான் இந்த நிறுவனத்துக்கு அங்கீகாரம் அளிக்க முடியும் என்று சொன்ன காரணத்தினால், அது பங்களூராக அமைந்துவிட்ட காரணத்தால், மாநில அரசே தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இதை அமைப்பது என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. இதைப்பற்றிய திட்டங்கள், விவரங்கள் இனிமேல்தான் தயாரிக்கப்பட வேண்டும்.

Stupa built in memory of Rajaji's participation in Salt Satyagraha at Vedaranyam.

* 31. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that proposals have been sent to the Government by the Collector of Thanjavur for rebuilding the whole structure of the Stupa built in memory of Rajaji's participation in Salt Satyagraha in 1930 at Vedaranyam, damaged recently by lightning;

(*b*) if so, the nature of the proposal; and

(*c*) the action contemplated to be taken by the Government in the matter?

வேதாரண்யத்தில் இராஜாஜி அவர்கள் உப்பு சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்டதன் நினைவாகக் கட்டப்பட்ட நினைவுச்சின்னம்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேதாரண்யத்தில் இராஜாஜி அவர்கள் 1930-ல் உப்பு சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்டதன் நினைவாகக் கட்டப்பட்டு அண்மையில் மின்னலால் தாக்கப்பட்டு சேதமுற்ற நினைவுச்சின்னம் முழுவதையும் மறுபடியும் கட்டித்தரும்படி கோரும் செயற்குறிப்புகளை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு அனுப்பியுள்ளார் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அச்செயற்குறிப்பின் தன்மை யாது?

(உ) இது குறித்து அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை யாது?